C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 15 OCTOBER 2023 ஆகாரம் : 09




# பயப்படாதே

## அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்

-2 இராஜாக்கள் 6:16

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| 05-SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| 05-SAT<br>7.30 PM<br>9.00 PM | 1st & 3rd WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| WED<br>7.30 PM | BIBLE STUDY & PRAYER<br>PARSONAGE<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| THU<br>7.30 PM<br>8.30 PM | 4 TH THURSDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |




**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

கடந்து வந்த பாதைகளில் உடன் இருந்த ஆண்டவர் இயேசுவுக்கு துதிகளை ஏறெடுப்போம். சங்கீதக்காரன் தாவீது,'என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி'என்று நன்றி யறிதலோடு(சங்கீதம் 103:1,2) ஆண்டவரை போற்றிப் பாடுகிறார். நாமும் திருச்சபை குடும்பங்களாக நன்றியறிதலோடு கடவுளின் திருமுன்னர் நவம்பர்—4 சனிக்கிழமை அன்று அறுப்பின் பண்டிகையை கொண்டாடுவோம், இது நமது அன்பின் ஐக்கிய பெருவிழாவாக அமைய ஆண்டவர் அருள் புரிவாராக.

அமெரிக்காவிலிருந்து ஒரு குழுவினர், இங்கிலாந்து நாட்டிற்கு சுற்றுலா சென்றனர். ஒவ்வொரு இடமாக பார்த்துவிட்டு, இங்கிலாந்தின் எழுப்புதலுக்கு காரணமாக இருந்த ஜான் வெஸ்லியின் வீட்டை பார்க்கச் சென்றனர். அவர் உபயோகித்த பொருட்களை எல்லாம் பார்த்துவிட்டு, அவரின் ஜெப அறைக்குள் வந்தனர். தரையில் ஒரு விரிப்பு மட்டும் இருந்தது, அந்த விரிப்பில் இரண்டு துவாரங்கள் இருந்தன. ஜான் வெஸ்லி அவர்கள் முழங்காலில் நின்று ஜெபித்ததின் விளைவாக ஏற்பட்ட துவாரங்கள் அவை என்றனர். அமைதியாக அதைப் பார்த்துவிட்டு, அடுத்த இடத்திற்குச் சென்றனர். அதன் பிறகு தங்கள் குழுவில் ஒருவர் இல்லை என்பதை அறிந்து மீண்டும் வெஸ்லியின் வீட்டிற்கு சென்றனர். அங்கு ஜெப அறையிலிருந்து பெரிய அழுகுரல் கேட்டது. அதிக நேரம் வெளியில் அமைதியாக காத்திருந்தனர். அழுகுரல் முடிந்து, மெதுவாக அந்த அறையை விட்டு வெளியே ஒரு வாலிபன் வந்தான். அவர்தான் உலகம் போற்றும் உத்தம ஊழியர் டாக்டர். பில்லி கிரகாம் அவர்கள். ஆண்டவரால் கூடாத காரியம் ஒன்று உண்டோ?

அன்றொருநாள் முற்பிதாக்களில் முதல் தந்தை ஆபிரகாம் பகலில் வெப்பம் மிகுந்த நேரத்தில் தம் கூடார வாயிலில் அமர்ந்திருந்த போது, மூன்று மனிதர்களை பார்த்து அவர்கள் அருகே ஓடி, தரை மட்டும் தாழ்ந்து வணங்கி வரவேற்று, ஆண்டவரே உமது கண்களில் எனக்கு கிருபை கிடைக்குமாயின் அடியேனை விட்டு போகாதிருந்து, தண்ணீர் கொண்டு வருகிறேன் உங்கள் கால்களை கழுவி இளைப்பாருங்கள் என்று வேண்டினார். (ஆதியாகமம் 18:1—4) பின்னர் ஆபிரகாம் ஓடி சாராள் இடத்தில் அப்பம் செய்யச் சொல்லி, தம் மந்தைக்கு ஓடி இளங் கன்றை பிடித்து வேலைக்காரனிடம் கொடுத்து சமைக்கச் சொல்லி, ஆபிரகாம் வெண்ணெய், பால், அப்பம், சமைத்த கறி இவற்றைக் கொண்டு வந்து அவர்கள் முன்பாக வைத்து அவர்கள் அருகே நின்றார்.(ஆதியாகமம் 18:6—8). ஆபிரகாமின் பணிவும் கனிவும் விருந்தோம்பலிலும் அவர்களின் மனம் மகிழ்ந்து, நெகிழ்ந்துப் போனதோ! அதனால் அவர்கள் ஆபிரகாமிடம், உன் மனைவி சாராள் எங்கே? என்று கேட்கின்றனர். (ஆதியாகமம் 18:9)

கர்த்தர் ஆபிரகாமிடம் நான் மீண்டும் வருவேன் அப்போது உன் மனைவி ஒரு குமாரனை பெற்று இருப்பார் என்று கூறினார். (ஆதியாகமம் 18:10) இதைக்கேட்ட சாராள் தம் உள்ளத்தில் நாங்கள் இருவரும் வயது முதிர்ந்தவர்கள் என்றும் தனக்கு மாதவிடாய் நின்று போனது என்றும் எண்ணி நகைத்தார். (ஆதியாகமம் 18: 11—12) ஆனால் கர்த்தர் ஆபிரகாமிடம் , சாராள் நகைப்பதும் , பிள்ளை பெறுவது உண்மையா என்று ஐயப்படுவதும் சரியா?(ஆதியாகமம் 18:13) கர்த்தரால் ஆகாத செயல் உண்டோ? நான் திரும்ப வரும்போது சாராளுக்கு குமாரன் இருப்பான் என்றார்.(ஆதியாகமம் 18:14)

பிரியமானவர்களே, நம்மிடமும் மகனே—மகளே நீ எங்கே இருக்கிறாய்? யாரைத் தேடுகிறாய்? "ஆண்டவரால் எல்லாம் கூடும்"இதில் சாராளைப்போல நகைக்கிறாயா? ஐயப்படுகிறாயா? இப்படிப் பல கேள்விகளை ஆண்டவர் எழுப்புகின்றார். இவற்றுக்கெல்லாம் உள்ளபடி விடை காணுவோம், ஆண்டவர் இயேசுவை நம்பிக்கையோடு தேடும் போது எல்லாம் கூடும். இதில் நகைப்பிற்கோ, ஐயத்திற்கோ கொஞ்சமும் இடமில்லை. ஆண்டவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும். திரியேக கடவுள் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

கேள்விகள் தொடரும்......

**இறைப் பணியில், ஆயர்**



*Rev. S.Baktha Thiyagarajan*



# விடுதலைப் பணியில் பெண்கள்

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

விடுதலை வீரர் மோசே வளர்வதில் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியம், அதனை சற்று ஆய்வோம்.

முதலில் மருத்துவச்சிகளான சிப்பிராள், பூவாள் இவர்கள் கடவுளுக்கு பயந்திருந்ததால் மோசே குழந்தையாக பிறந்த போதே பார்வோன் அரசரின் கட்டளையை மீறி குழந்தையை உயிரோடு வாழ விட்டார்கள். (யாத்திராகமம் 1:21) மருத்துவச்சிகள் கடவுளுக்கு பயந்ததினால் அவர்களின் குடும்பங்களை தழைக்கும் படி கர்த்தர் செய்தார்.

அடுத்ததாக, மோசேயின் தாய் யோகபேத்(யாத்திராகமம் 6:20) இவர் மூன்று மாதங்கள் குழந்தையை ஒளித்து வைத்து அதற்கு மேல் கூடாமல் நாணற்பட்டியில் வைத்து குழந்தையை நதியில் விட்டார். மோசேயின் சகோதரி மிரியாம் குழந்தையை பின் தொடர்ந்தார். அந்தக் குழந்தை பார்வோன் மகள் கையில் கிடைத்தவுடன் குழந்தையை வளர்க்க ஒருவரை நான் அழைத்து வரட்டுமா என்று கேட்டு மோசேயின் தாயையே அழைத்து வந்து விடுகிறார். மோசேயின் தாய் குழந்தைக்கு தம் மக்களின் அடிமை நிலையை சொல்லிக் கொடுத்து வளர்க்கிறாள். மோசேயும் தம் கடவுள் மீதும் தம் மக்கள் மீதும் பற்றுள்ளவராக வளர்கிறார். இதில் மோசேயின் தாயும், அவரின் அக்கா மிரியாமும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

அடுத்ததாக பார்வோன் மகள் (யாத்திராகமம் 2:5,6,8) அந்தக் குழந்தை மீது இரக்கமுற்று குழந்தையை மிக நேர்த்தியாக வளர்த்தெடுக்கிறாள். தமது சொந்த குழந்தையைப் போல் வளர்க்கிறாள் அது எபிரேய குழந்தை என்று தெரிந்தும், பிள்ளை எல்லா கலைகளிலும் சிறந்து விளங்கும்படி வளர்க்கிறாள், மோசேயின் வளர்ச்சியில் இவர்களின் பங்கும் பெரிது.

அடுத்ததாக மோசியின் மனைவி சிப்போராள் தம் கணவர் மோசேயுக்கு கர்த்தரால் சோதனை வந்தபோது மோசேயின் மனைவி அவரின் உயிரை காப்பாற்றுகிறார். (யாத்திராகமம் 4:24,25)

மோசேயின் குழந்தை பருவம் முதல் விடுதலைப் பணியில் ஈடுபடும் வரை மருத்துவச்சிகளான சிப்பிராள், பூவாள்; தாய் யோகபேத்; சகோதரி மிரியாம்; பார்வோனின் மகள்; மோசேயின் மனைவி சிப்போராள் ஆகிய பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானவைகள்.

பிரியமானவர்களே, நமது குடும்பங்களில், ஆண்டவரின் ஊழிய பாதையில் அதாவது பாவத்தில் இருக்கும் மக்களை விடுதலை செய்யும் பணியில் நமது பங்களிப்பு எவ்வளவாய் இருக்கிறது என்பதை சிந்திப்போம், நம்மை நாமே சீர்தூக்கி செயல்படுவோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

ஆண்டவரின் இறைப் பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . P . Velanganni*





# செயலர் மடல்

பிதாவாகிய கர்த்தராலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குச் சமாதானமும் விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் உறுதியான அன்புடனே அன்புகூருகிற அனைவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக, ஆமென்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த செப்டம்பர் மாதத்தில் நமது பிள்ளைகளுடைய CHAMPION FOR CHRIST –ஐ மிகவும் சிறப்பாக நடத்தி முடிக்க தயை செய்த கர்த்தருக்கே ஸ்தோத்திரம். நமது பிள்ளைகள் கர்த்தர் அவர்களுக்கு அளித்த தாலந்துகளை திறமையாக வெளிப்படுத்தினார்கள், அதற்கு ஒத்துழைத்த திருமறை பாட ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் திருச்சபையினர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி வரும் மாதங்களிலும் நமது அறுவடை பண்டிகையை நாம் திருச்சபையாக நவம்பர் நான்காம் தேதி சனிக்கிழமை அன்று இணைந்து கொண்டாட இருக்கின்றோம்.

பண்டிகை என்றாலே அது இறைவன் கொடுத்த நியமம்,சீரிய முறையில் நல்ல திட்டங்களை உருவாக்குவதில் மிகுந்த கவனமும் உற்சாகமும் கொண்டவர் CMS மிஷனரி கனம். தாமஸ் உலாக்கர் ஐயரவர்கள் (09.02.1859–24.08.1912) அவர்தான் முதன் முதலில் திருநெல்வேலி திருமண்டலத்தில் சபை மன்ற அளவில் அறுப்பின் பண்டிகை ஆசரிக்க திட்டம் தீட்டினார்.

இந்த அறுப்பின் பண்டிகையின் நோக்கம் என்னவென்றால், இறை மக்களை ஏதாவது ஓர் இடத்தில் கூடி வரச் செய்து, இணைந்து கடவுளை வழிபட்டு, ஐக்கியத்துடன் தங்கள் அறுப்பின் முதற்பலனை செலுத்த வழி வகுப்பதாகும். இஸ்ரவேலருக்கு கடவுள் கற்றுக்

கொடுத்ததும் இதுதான். யாத்திராகமம் 23:16 கூறுவது,"நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளில் பலனை சேர்த்து தீர்ந்த போது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக"என்பதே.

அப்படியாக நமது CSI அல் அய்ன் தமிழ் திருச்சபையிலும் திட்டமிட்டு நடைபெற இருக்கிற அறுப்பின் பண்டிகைக்காகவும், அதின் ஆயத்தங்களுக்காகவும் சபையார் ஜெபிக்கவும், உழைக்கவும் கொடுக்கவும் அறுவடை பண்டிகையில் உங்களை குடும்பமாக இணைத்துக் கொள்ளவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கர்த்தர் நம் திருச்சபையில் அனைவரின் குடும்பங்களையும் ஆசீர்வதித்து ஒவ்வொருவரின் தேவைகளையும் நிறைவேற்றுவார் என்று கர்த்தரிடத்தில் விசுவாசிக்கிறேன், கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக, ஆமென்.

இறைப் பணியில்

Mr. C . Havin Heba

திருச்சபைச் செயலர்






கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே! சகோதரியே! உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் கர்த்தர்தாமே இந்த மாதம் முழுவதும் நம்மோடு கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக இந்த மாதத்தில் வாக்குதத்தம்

“என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னுடனே இருக்கிறேன்” (எரேமியா 46:28).

தேவன் தாமே இந்த இடத்தில் தம்முடைய மக்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிற அருமையான வாக்குத்தத்தத்தை வாசிக்கிறோம். ‘நீ பயப்படாதே’. ஆம்! நம்மை பயப்படாதே என்று மாத்திரம் சொல்லவில்லை, ஏன் பயப்பட வேண்டாம் என்பதை குறித்தும் சொல்லுவதைப் பார்க்கிறோம். ‘நான் உன்னுடனே இருக்கிறேன்’. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மற்றொரு பெயர் இம்மானுவேல். அதன் பொருள் தேவன் நம்மோடிருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. எனவே தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற நிச்சயத்தோடு வாழுகிற ஒரு வாழ்க்கை நம்மிடத்தில் உண்டா? அவருடைய வார்த்தை நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நாம் விசுவாசிக்கிறோமா? நீங்கள் அதை நம்பும்பொழுது, நிச்சயமாக தேவன் உங்களோடு கூட இருக்கிறார் என்பதைச் சொல்ல முடியும். மோசேயின் மரணத்திற்கு பின்பு யோசுவாவை பார்த்து தேவன், “நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” (யோசுவா 1:5). என்று சொன்னார்.

இங்கே தேவன் யோசுவாவை தைரியப்படுத்துவதைப் பார்க்கிறோம். யோசுவா இவ்வளவுபெரிய ஒரு பணியைச் செய்யும் படியான வேளையில் ஆண்டவர் இவ்விதம் யோசுவாவைப் பார்த்துச் சொல்லுகிறார். மோசே இல்லாத இந்த சூழ்நிலையில், எவ்விதமாக இந்த இஸ்ரவேல் மக்களை வழி நடத்துவது என்று யோசுவா பயந்து கொண்டிருந்த வேளை அது. இஸ்ரவேல் மக்கள் முரட்டாட்டமுள்ள ஜனங்கள் என்று யோசுவா பார்த்திருந்தாலும், ஆண்டவர் இந்த இடத்தில் நான் உன்னுடனே கூட இருக்கிறேன், நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொன்னார். தேவன் தம்முடைய பிள்ளைகளைக் கைவிடமாட்டார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். அப்பொழுது ஆண்டவர் நமக்கு மிகப் பெரிய காரியத்தை செய்வார்.நடைமுறை வாழ்க்கையில் தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற உணர்வோடு நம்மால் வாழ முடிகிறதா என்பதை சிந்தித்துப் பார்போம.

கர்த்தர் உங்களை தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக .ஆமென்., ஆமென்

ARTICLE BY

MEN’S FELLOWSHIP

# கிறிஸ்தவள்



யார் கிறிஸ்தவள் என்ற கேள்வி எழுப்பினால் நாம் ஒவ்வொருவரும் ஒரு பதிலை சொல்லுவோம்.

- கிறிஸ்துவை முழுமையாக விசுவாசிப்பவர்கள்
- கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக் கொண்டவர்கள்
- கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வாழ்பவர்கள்

இப்படி பற்பல விதத்தில் நாம் பதில் சொல்லலாம். ஆனாலும் நம்மிலும் பெயர் கிறிஸ்தவர்கள் இருப்பதும் உண்மை. அப்படியென்றால்,

- கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததால்
- பரம்பரை கிறிஸ்தவர்களாக இருப்பதால்
- ஆலயத்திற்கு செல்வதால்
- ஏன் ஆலயத்தில் பொறுப்புள்ள பதவி வகிப்பதால்

ஒருவரை கிறிஸ்தவர் என்று நாம் சொல்லிவிட முடியாது. உண்மையில், கிறிஸ்தவள் என்பவள் தன் பாவத்தை உணர்ந்து, அதை முழுவதுமாக அறிக்கை செய்து, தன்னை முழுவதுமாக கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுத்து, மனம் திரும்பி, பாவ வாழ்க்கையை வெறுத்து, இயேசு கிறிஸ்துவின் ரத்தத்தால் கழுவப்பட்ட நிச்சயத்துடன், புது ஜீவனை பெற்ற அனுபவத்துடன், புது மனுஷியாக வாழ்பவளே கிறிஸ்தவள். இதற்கு உதாரணமாக சவுல் பவுலான சம்பவத்தை வேதாகமத்தில் நாம் பார்க்கலாம். பாவியான சவுலுக்கு இயேசு தரிசனம் கொடுத்து பவுல் அப்போஸ்தலனாக மாற்றிய சம்பவம் நம் அனைவருக்கும் தெரிந்ததே.

சவுல் – எபிரேய மொழியில்

பவுல் – கிரேக்க மொழியில், அவர் பெயர்இருந்தாலும்

## பவுலின் மனமாற்றம் :

**அப்போஸ்தலர் 9–அதிகாரம்**

**கிறிஸ்துவை பின்பற்றிய சீடர்கள் கிறிஸ்தவத்தை போதிப்பதையும், இயேசுவை வழியென்றும், இரட்சகர் என்றும், மீட்பர் என்றும், முடிவில்லாமல் போதிப்பதை கண்டு அவர்கள் மேல் கோபம் கொண்டு அவர்களை அழிக்க விரும்பினான்.**
**கிறிஸ்தவர்களை கைது செய்யவும், காவலில் போடவும், யூத மத குருக்ளிடம் அனுமதி கடிதம் பெற்றுக்கொண்டு, சமஸ்கிருத பயண பட்டான்.**

**திடீரென்று வானத்திலிருந்து ஒரு ஒளி சவுலை சுற்றி பிரகாசித்தது. சவுலே சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்? என்ற சத்தம். சவுல் திகைத்தார். சவுல்: ஆண்டவரே, நீர் யார்? என்று கேட்க, அதற்கு: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்ற சத்தத்தை கேட்ட சவுலின் வாழ்வில் பெரும் மாற்றத்தை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம்.**

**அதே சவுலே புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை அவிக்கிறவனாக, கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாக மாறி தைரியமாகசுவிசேஷத்தை பிரசங்கம் செய்பவனாக மாறிய சம்பவம் நமக்கு தெரியும்.**

**கி.மு, கி.பி கிறிஸ்து பிறப்பதற்கு முன், கிறிஸ்து பிறப்பதற்கு பின் இருப்பது போல, இயேசு கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கு முன், இயேசு கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக் கொண்ட பின் நம் வாழ்வில் பவுல் மாதிரி மாற்றப்பட்ட அனுபவம் இருந்தால்,**

**அப்படி என்றால்,**

- **நம் வாழ்வில் மாற்றம்**
- **நம் நடத்தையில் மாற்றம்**
- **நம் சுபாவத்தில் மாற்றம்**
- **நம் பார்வையில் மாற்றம்**
- **நம் செயலில் மாற்றம்**
- **நம் நடையில் மாற்றம்**

**இப்படி புது சிருஷ்டியாக மாற்றமடைந்த அனுபவத்தை பெறுபவள் உண்மை கிறிஸ்தவள் என்று சொல்லலாம். 2கொரிந்தியர் 5:17 சொல்லப்பட்டு இருக்கிற பிரகாரமாய்**

"ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புது சிருஷ்டியாய் இருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின".

**நாம் பாவத்திற்கு செத்து, நீதிக்குப் பிள்ளைத்திருப்பவர்களாய் நம் பாவங்களை சிலுவையில் அறைந்து, இயேசு கிறிஸ்துவின் மூலமாய், இயேசு கிறிஸ்துவுடன் கூட உயிர்த்தெழுந்தது போல நீதிக்கு பிழைத்தவர்களாக இருந்தோமேயானால், கலாத்தியர் 2:20 கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்ற உறுதி உள்ளவள் கிறிஸ்தவள்!**

Article by

## SIS. INDIRA ISRAEL

WOMEN'S Fellowship





# யோசேப்பு

## சமரசம் செய்யாத இளைஞன்

வண்ணமயமான ஆடை அணிந்த ஒரு சிறுவன் தன் சகோதரர்களால் அடிமையாக விற்கப்பட்ட கதையை நம்மில் பெரும்பாலோர் அறிந்திருப்போம். யோசேப்பின் கதை ஆதியாகமம் 37 இல் தொடங்குகிறது, அங்கு அவர் தனது குடும்பத்துடன் இரண்டு தீர்க்கதரிசன கனவுகளைப் பகிர்த்து கொண்டார், அவரது சகோதரர்களின் பொறாமையை எதிர்கொண்டார், மேலும் எகிப்துக்கு விற்கப்பட்டார். இவையெல்லாம் அவர் 17 வயது இளைஞரனாக இருந்தபோது நடந்தது.

பின்னர், சிறையிருப்பில் யோசேப்பு பார்வோனின் அதிகாரிகளில் ஒருவரான போத்திபாருக்கு சேவை செய்தார்.எப்பொழுதும் கடவுள் யோசேப்புக்கு தயவு காட்டிய போதிலும், ஒரு புதிய தடையானது போத்திபாரின் மனைவியின் வழியாக வந்தது. யோசேப்பின் நல்ல தோற்றத்தில் ஈர்க்கப்பட்ட அவன், தொடர்ந்து அவனைத் தன்பக்கம் கவர்ந்திழுக்க முயன்றாள். போத்திபரின் மனைவி அதிகாரம்

> **"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.**
>
> — 1தீமோத்தேயு 4:12

மிக்க ஒரு பெண் மற்றும் தனது முதலாளியும்கூட, ஆனாலும் யோசேப்போ அவளுடைய கோரிக்கைகளுக்கு எதிராக உறுதியாக நின்றார் ஏனெனில் யோசேப்பு தனது உண்மையான முதலாளி யார் என்பதை அறிந்திருந்தார். அவர் கடவுளுக்கு முன்பாக நேர்மையாக நடப்பதில் மட்டுமே அக்கறை கொண்டிருந்தார் யோசேப்பு கர்த்தருக்கு பயந்து, தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றினான் போத்திபரின் மனைவியால் கற்பழிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு இறுதியில் சிறையில் தள்ளப்பட்டாலும், கடவுள் ஒருபோதும் யோசேப்பின் பக்கத்தை விட்டு விலகவில்லை.

யோசேப்போ எங்கு சென்றாலும் எல்லோராலும் மிகவும் விரும்பப்பட்டார், கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டார் மேலும் பல மக்களை (அவரது சொந்த குடும்பம் உட்பட) கொடிய பஞ்சத்திலிருந்து காப்பாற்ற கடவுள் அவரைப் பயன்படுத்தினார்.


நாம் பயமின்றி வாழவும், கடவுளுடைய வழிகளில் உண்மையாக நடக்கவும் தேர்ந்தெடுக்கும்போது, அவர் அதைக் கனப்படுத்துவது மட்டுமல்லாமல், நம்முடைய எல்லா தேவைகளையும் வழங்குவார் என்பதை அறிந்துகொள்வோம்

யோசேப்பைப்போலவே நாமும் வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மற்றவர்களுக்கு மாதிரியாயிருக்க முயற்சி செய்வோம்...


ARTICLE BY


MR.J.STEPHEN CHELLARAJ

YOUTH FELLOWSHIP



# PRIMARY -A-


Your Word
is a lamp to
my feet
and a
light
to my
path.
BERNICIA



When they saw the star,
they were overjoyed.
Matthew 2:10
JANIA


As for me & my family,
we will serve
the Lord.
Joshua 24:15
JOHANNA










TEACHER

## Mrs. RENA JOSE

# SEPTEMBER WINNERS

## Find the way

- Liana Ann
- Janet Thirsha
- Jason Eric
- Regan Shan

## Kids Colouring

- Liana Ann
- Janet Thirsha
- Chris Gabriel
- Regan Shan

## Word Search

- Janet Thirsha
- Jason Eric
- Janet Zaharina
- Jessica

## Cross Word

- Janet Thirsha
- Jason Eric
- Chris Gabriel
- Jemimah

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month – Year

**To Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.



# NUMBERS: 13-24

# எண்ணாகமம்: 13-24

OCTOBER '23 - QUESTIONS

QUIZ TIME?

*1. ஒரே குலையுள்ள ஒரு திராட்சைக் கொடியை எங்கு அறுத்தார்கள்?*

*2. வேறே ஆவியை உடையவன் யார்?*

*3. ஓய்வு நாளில் விறகுகளைப் பொறுக்கினவனை என்ன செய்தார்கள்?*

*4.பூமி தன் வாயைத் திறந்து யாரை விழுங்கிப் போட்டது?*

*5. வாதுமைப் பழங்களைக் கொடுத்தக் கோல் எது?*

*6. மீட்க வேண்டியவைகளுக்கு எத்தனை சேக்கல் கொடுக்க வேண்டும்?*

*7. சுத்தமானவன் எதை எடுத்து தோய்த்து கூடாரத்தின் மேல் தெளிக்க வேண்டும்?*

*8. ஆரோன் மரித்த இடம் எது?*

*9. சர்ப்பம் கடித்தவன் எப்படிப் பிழைத்தான்?*

*10. மூன்று தரம் அடிக்கும்படி என்ன செய்தேன் என்று கேட்டது யார்?*

*11. "இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை" வசன இடத்தை குறிப்பிடுக?*

*12. ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும் எனக் கூறியது யார்?*

## செப்டம்பர்- 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. எண்: 1:46 | 2. எண்: 2:20 | 3. எண்: 3:24 | 4. எண்: 4:40 | 5. எண்: 5:22,27
6. எண்: 6:14,15 | 7. எண்: 7:22 | 8. எண்: 8:24 | 9. எண்: 9:13 | 10. எண்: 10:29
11. எண்: 11:31 12. எண்: 12:7

**திருமதி. பிப்ளின் நெல்சன், திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ரேனா ஜோஸ் செல்வகுமார், செல்வி. அஜின்ஷா, திருமதி. ரோஸ்லின் தமிழ்ச்செல்வி, திருமதி.பானு அருண்குமார், திருமதி.பெமிலா ரேச்சல்.**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / OCTOBER'23 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name:

Date:

# Kids Coloring




The Dove Returns to Noah With an Olive Branch (Genesis 8:10-11)

# Find the Way

Name : ..........................................................

## Connect Joseph to His Brothers

Find the path from Joseph in the center to each brother in the corner.



# WORD SEARCH

Find the words listed below

## BIBLE WORDSEARCH

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | C | A | W | M | Z | D | C | E | A |
| O | W | R | L | A | G | I | G | G | N |
| T | C | K | F | R | H | O | L | Y | G |
| D | O | L | O | R | D | S | E | V | E |
| R | W | B | A | P | E | B | W | R | L |
| A | D | A | M | K | E | D | E | N | P |
| A | T | J | U | M | T | Z | N | I | Y |
| A | F | A | I | T | H | R | O | J | X |
| I | Q | W | W | S | P | V | A | R | E |
| F | M | L | G | O | D | W | H | Q | X |



### WORD LIST

| | |
|---|---|
| ADAM | FAITH |
| ANGEL | GOD |
| ARK | HOLY |
| EDEN | LORD |
| EVE | NOAH |

Name : ..........................................................................

# CROSS WORDS

Name : ..........................................................................



# RUTH


**Read Ruth 1:1-4:22 (ESV). Complete the crossword below.**

**ACROSS**

2) "Your _____ will be my people and your God my God."
4) "_____ instructed his young men, "Let her glean even among the sheaves and do not reproach her."
6) Name of Obed's grandson.
7) Boaz took Ruth and she became his _____.
8) Name of Naomi's husband.
9) Name of Ruth's mother-in-law.

**DOWN**

1) Ruth went down to the _____ _____ and did just as her mother-in-law had commanded her.
3) Name of Ruth and Boaz's son.
4) Ruth and Naomi returned to this town together.
5) "The day you buy the field from the hand of Naomi, you also acquire Ruth the _____..."



# OCTOBER - 2023

| | |
|---|---|
| 01-OCT | Mrs. John Gerald Sheeba Derick |
| 01-OCT | Baby. H.Johanna Jane D/o Mr. Havin Heba |
| 01-OCT | Miss. Angilin Remi Princy D/o Mr. Rajan Prabakaran |
| 03-OCT | Baby. Smyrna Syntche D/o Mr. Santhosh Kumar |
| 03-OCT | Mr. J.Stephen Chellaraj |
| 04-OCT | Mr. Praveen Paul |
| 05-OCT | Mr. Immanuel Suthan |
| 05-OCT | Baby. Nivina Chandrasekar D/o Mr. Chandrasekar |
| 07-OCT | Mr. Sharvin John |
| 08-OCT | Ms. Akila |
| 08-OCT | Baby. Janet Zahaina D/o Mr. Arunkumar.K |
| 08-OCT | Mrs. Kitty Christina |
| 08-OCT | Mr. Samuel Nathan |
| 09-OCT | Baby. D.P.Mercy D/o Mr. Deva Prakash |
| 11-OCT | Mr. Prabu Dinesh Kumar |
| 13-OCT | Mrs. Anitha Geroge |
| 13-OCT | Mastr. Kevin Packiaraj Godwin S/o Mr. Godwin |
| 14-OCT | Mrs. Godshilin |

*Wish you many more happy returns of the day God bless you all*

# OCTOBER - 2023

| | |
|---|---|
| 15-OCT | Mr. Jovin |
| 15-OCT | Mr. Godson Daniel Rao |
| 17-OCT | Mrs. Sahila Grace Justin |
| 18-OCT | Mrs. Helen Hemabai |
| 20-OCT | Miss. Aidean Joyphonse Derick D/o Mr. Derick |
| 20-OCT | Baby. Athithi Shamma D/o Mr. Celin Jose |
| 21-OCT | Mr. Jesho.J.C |
| 21-OCT | Mrs. Sheeba Deva Prakash |
| 22-OCT | Baby. B.N Kariss Angelo D/o Rev. S. Paranjothi Baskar |
| 23-OCT | Mrs. Biblin Christabel |
| 23OCT | Baby. Janet Zahaina D/o Mr. Arunkumar.K |
| 24-OCT | Mr. Justin Oliver |
| 24-OCT | Baby. Jemimah . A D/o Mr. Ashok Kumar S |
| 27-OCT | Mr. Jayan Dharmaraj |
| 29-OCT | Baby. Abigail Christine D/o Mr. Praveen Paul |
| 31-OCT | Mr. Pavul Hensman |
| 31-OCT | Mastr. Eion Jayden Godwin S/o Mr. Jason Samuel |

*Wish you many more happy returns of the day God bless you all*

*Wishing you a lifetime of love, laughter, and happiness on your Anniversary*

# OCTOBER *Wedding* ANNIVERSARY

| | |
|---|---|
| **05-OCT** | Mr. Ravindra<br>&<br>Mrs. Sunitha Ravindra |
| **11-OCT** | Mr. Daniel Durai Singh<br>&<br>Mrs. Pamela Rachel Daniel |
| **21-OCT** | Mr. Prabu Dinesh Kumar<br>&<br>Mrs. Rebecca |

*"The Lord bless you and keep you; the Lord make his face to shine upon you and be gracious to you; the Lord lift up his countenance upon you and give you peace."*
















CHAMPS FOR CHRIST - 2023











CHAMPS FOR CHRIST - 2023











CHAMPS FOR CHRIST - 2023
















CHAMPS FOR CHRIST - 2023



CHAMPS FOR CHRIST - 2023











# CHAMPS FOR CHRIST - 2023

# *Be used by*

# GOD, NOT BY PEOPLE.




**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**



**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**